**இந்திய கடற்கரைகளில் பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுக்கும் நோக்கில் 100 இடங்களில் MSS@100 கடற்கரை தூய்மை வாரம் தொடங்கியது.**

சர்வதேச கடற்கரை தூய்மைபடுத்தல் தினம் 2025ஐ கொண்டாடும் நோக்கத்தில், எம். எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் (MSSRF) ஒரு வார கால கடற்கரை தூய்மைபடுத்தும் பிரச்சாரம் தொடங்கியது, இது செப்டம்பர் 17 முதல் 23 வரை நடைபெறும். இது HCL அறக்கட்டளை, தமிழ்நாடு வனத்துறை, INCOIS, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், அரசு மற்றும் அரசு அல்லாத தொண்டு நிறுவனம் இணைந்து இந்தப் பிரச்சாரம் நடத்தப்படுகிறது. இந்தப் பிரச்சாரம் பாரத ரத்னா விருது பெற்ற பேராசிரியர் எம்.எஸ். சுவாமிநாதனின் நூற்றாண்டு பிறந்த நாளையும், கடற்கரை பாதுகாப்பு மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்படுகிறது.

செப்டம்பர் 17 ஆம் தேதி, MSS@100 கடற்கரை தூய்மை வாரம் சென்னை காசிமேடு கடற்கரையில் சுற்றுச்சூழல், தமிழ்நாடு காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறைக்கான கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ IAS, தொடங்கி வைத்தார். இந்த நிகழ்வில் MSSRF-யின் தலைவர் டாக்டர். சௌம்யா சுவாமிநாதன், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் (TNPCB) தலைவர் டாக்டர் ஜெயந்தி எம். IFS, காசிமேடு விசைப்படகு மீனவர் சங்கத்தினர், கடலோர காவல்படை, மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் மூத்த அதிகாரிகள் மற்றும் தன்னார்வலர்கள் உடன் இருந்தனர்.

**தொடக்க விழா பற்றி:**

127 க்கும் மேற்பட்ட மீனவர்கள், தன்னார்வலர்கள், மாணவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கேற்ற இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள், காசிமேடு மீனவர்களுக்காக கடலில் பேய் வலைகள், கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக் மாசுபாட்டைக் கையாள்வது மற்றும் MSS@100 கடற்கரை தூய்மை வாரத்தின் பல்வேறு தகவல்கள் பகிர்ந்து கொண்டனர். மேலும் Rialto மற்றும் MSSRF பங்களிப்புடன் பிரத்யேக பிளாஸ்டிக் பாட்டில் சேகரிப்பினை நன்கொடையாக சிறப்பு விருந்தினர் வழங்கினார்.

**சுப்ரியா சாஹூர் IAS:**

"இப்போது நமது நீரில் மீன்கள் இருக்கின்றன, ஆனால் பிளாஸ்டிக் கடல்வாழ் உயிரினங்களை பாதிக்கின்றன. இந்த பாதிப்பு நமது எதிர்கால சந்ததியினருக்கு பாதிக்கும். நமது இளைஞர்களுக்கான எதிர்காலத்தைப் பாதுகாக்க வேண்டும் மற்றும் நமது கடலை மாசுபடுத்துவதை நிறுத்த வேண்டும்."MSS@100 கடற்கரை தூய்மை படுத்தும் முயற்சி பாராட்டத்தக்கது. டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் நம்மிடம் சொன்னார், நமது உலகத்தைப் பாதுகாப்பது நமது அன்றாட கடமை என்றும். "தமிழ்நாடு அரசின் மீண்டும் மஞ்சப்பை திட்டம் பிளாஸ்டிக் பைகளுக்கு பதிலாக துணி பைகளை வழங்குகிறது. பிளாஸ்டிக் பைகள் மக்குவதற்கு 5,000 ஆண்டுகள் எடுக்கும், ஆனால் துணி பைகள் மிக வேகமாக மக்கிவிடும்."

**டாக்டர் சௌம்யா சுவாமிநாதன்:**

"பிளாஸ்டிக் மாசுபாட்டின் தாக்கத்தைக் குறைப்பதில் மீன்பிடி சமுதாயங்கள் முன்னணியில் உள்ளன அவர்களைவிட வேறு யாரையும் நன்றாக பார்க்கமுடியாது. கடல் விலங்குகள் பிளாஸ்டிக் பைகள் மற்றும் கழிவு பொருட்களில் சிக்கிக்கொள்வதை மீனவர்கள் நீரில் பார்க்கிறார்கள்."

"நாம் பிளாஸ்டிக்கை கடலில் வீசும்போது, அது உணவுக் கழிவுகளைப் போல சிதைவடையாது. அது நுண்பிளாஸ்டிக்குகளாக உடைந்து மீன்கள் அதை உட்கொள்கின்றன, நாம் அந்த மீன்களை சாப்பிடும்போது, நமது ஆரோக்கியத்தைச் சேதப்படுத்தும் தீங்கு விளைவிக்கும் நுண்பிளாஸ்டிக்குகளை நாம் உட்கொள்கிறோம்."

**டாக்டர் ஜெயந்தி எம்:**

"கடற்கரை தூய்மை படுத்தும் முயற்சிகளில் மீன்பிடி சமுதாயங்களை ஈடுபடுத்துவது மகிழ்ச்சி. 100 கடற்கரைகளில் சுத்தப்படுத்துதல் பணிகளைத் தொடங்கியதற்கு MSSRF மற்றும் HCL அறக்கட்டளைக்கு நன்றி."

செப்டம்பர் 17 ஆம் தேதி கடற்கரை சுத்தப்படுத்துதல் இயக்கம்:

MSSRF ஊழியர்கள், மாவட்ட அளவிலான அரசு அதிகாரிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்கள் 4 கடற்கரை மாநிலங்களில் உள்ள 10 மாவட்டங்களில் இருக்கும் 18 கடற்கரைகளில் ஒரே நேரத்தில் சுத்தப்படுத்துதல் முயற்சிகளை ஏற்பாடு செய்தனர் - தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசம் மாநிலத்தில் இந்த

சுத்தப்படுத்துதல் நிகழ்வை நடத்தும் நோக்கத்தில் தன்னார்வலர்கள் பேய் வலைகள், கண்ணாடி பாட்டில்கள், பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் பிற குப்பைகளைச் சேகரித்தனர்.

**செப்டம்பர் 17 ஆம் தேதி கடற்கரை சுத்தப்படுத்துதல் பிரச்சாரம்:**

செப்டம்பர் 17 ஆம் தேதி நடந்த இந்த நிகழ்வில் சுமார் 1250 தன்னார்வலர்களை ஈடுபடுத்தி 19 கிலோ மீட்டர் அளவில் கடற்கரை பகுதியில் சுத்தப்படுத்துதல் முயற்சிகளை ஈடுபட்டனர். இதில் 5074 கிலோகிராம் குப்பைகள் சேகரிக்கப்பட்டது, சேகரிக்கப்பட்ட கழிவுகள் ராமேஸ்வரத்தில் உள்ள MSSRF மையத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

**MSS@100 கடற்கரை சுத்தப்படுத்துதல் வாரம் பற்றி:**

இந்தியா முழுவதும் தேர்வு செய்யப்பட்ட 100 கடற்கரைகளில் நடைபெறும் இந்த ஒரு வார தொடர் நிகழ்வில் மீனவர்கள், சமூக ஆர்வலர்கள், பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட அமைப்புகளை உள்ளடக்கி இந்த கடலோர தூய்மைப்படுத்தும் பணியில் சுமார் 5,000 தன்னார்வலர்களின் பங்கேற்புடன், 75–100 கி.மீ நீளமுள்ள கடற்கரைகளில் இருந்து சுமார் 50–70 டன் கடற்கரைக் குப்பைகளை அகற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடலோர பாதுகாப்பு இயக்கத்தில் தனது தந்தையின் நீடித்த மரபை முன்னெடுக்கும் முயற்சியாக MSSRFயின், தலைவர் டாக்டர் சௌமியா சுவாமிநாதன் மற்றும் அரசு மூத்த அதிகாரிகளுடன் இந்த பிரச்சாரத்தை நாடு தழுவிய அளவில் முன்னெடுக்கப்படுகிறது

**MSS@100 கடற்கரை சுத்தப்படுத்துதல் வாரம் பற்றிய மேலும் தகவலுக்கு:**

https://www.mssrf.org/mss100-coastal-clean-week-2025